# இந்து இஸ்லாம் மதங்களுக்கிடையிலான சமரசப் போக்கு : மொகலாய மன்னர்களது ஆட்சிக் காலப் பகுதியை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

**Selvakumari. M**

Lecturer (prob) in Hindu Civilization, Dept of Languages, SEUSL.

selvakumari.selva@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மொகலாயர் ஆட்சிக் காலப் பகுதியில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே அரசியல், சமய, சமூக பொருளாதார ரீதியில் ஒரு வகையான இணக்கப்பாட்டினை அவதானிக்க முடிகிறது. பாபர், உமாயூன், அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான், அவுரங்கசீப் போன்ற மொகலாய மன்னர்களுள் ஒரு சிலர் சமரசப் போக்குடையவர்களாகக் காணப்பட்டாலும் அவுரங்கசீப் போன்றோர் காழ்ப்புணர்ச்சி மிக்கவர்களாகக் காணப்பட்டனர். அதேவேளை, சாதிப்பாகுபாடு, சொத்துரிமை, விவசாயிகளின் போராட்டம், கடுமையான சமுதாயக் கட்டமைப்பு, வெவ்வேறு கலாசாரங்களின் கலப்பு, பெண்ணடிமை, மதமாற்றம் எனப் பல பிரச்சினைகளை இந்துக்களும் இஸ்லாமியர்களும் எதிர்கொண்டனர். இதனால் சமூகத்தில் சீர்கேடுகள் அதிகரித்தன. எனவே, இச்சீர்கேடுகளைக் களைந்து சமூகத்தில் சமூகப் பொறையினை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. இக்காலப் பகுதியில் இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே ஒற்றுமையினை ஏற்படுத்துவதற்கு பாபர், அக்பர் போன்றோர் பல செயற்பாடுகளை மேற்கொண்டனர். இப்பின்னணியில், மொகலாயர் ஆட்சிக்காலப் பகுதியில் இந்து - இஸ்லாம் மதத்தினருக்கிடையே சமரச நிலையினை ஏற்படுத்துவதற்கு மொகலாய மன்னர்கள் ஆற்றிய பங்களிப்பினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு நகர்கின்றது. இந்து - முஸ்லிம் மக்களிடையே சமூக ஒற்றுமையினை வலியுறுத்துவதில் மொகலாய மன்னர்களது பங்களிப்பு எவ்வாறு அமைந்தது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். மொகலாய மன்னர்களது வரலாற்றை அறிய உதவும் அகப் புறச் சான்றுகளும் வடஇந்திய வரலாறு தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் மூலங்களாக அமைகின்றன. இவ்வாய்வு, சமூகவியல், ஒப்பீட்டு, விவரண ஆய்வு முறைகளைப் பின்பற்றுகிறது.

**திறவுச் சொற்கள்:** மொகலாயர், காழ்ப்புணர்ச்சி , சமரசம், சமயப் பூசல், தீன் இலாஹி.

## அறிமுகம்:

சங்கிஸ்கான் வழிதோன்றலில் வந்த மொகலாயர்கள் காலத்திற்குக் காலம் இந்தியா மீது பல படையெடுப்புகளை மேற்கொண்ட போதும் பாபர் மன்னருடைய படையெடுப்பே வெற்றி கண்டது. அந்தவகையில், கி.பி 1526இல் மொகலாயர் சாம்ராஜ்ஜியத்திற்கு அத்திவாரமிட்ட முதல் மன்னனாக இவன் குறிப்பிடப்படுகிறான். அதன் பின்னர் ஹுமாயூன் (கி.பி 1530 - 1540), அக்பர் (கி.பி 1542 - 1605), ஜகாங்கீர் ( கி.பி 1569 - 1627), ஷாஜகான் (கி.பி 1627 - 1658), அவுரங்கசீப் (கி.பி 1658) ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். இவர்களுடைய ஆட்சிக் காலப் பகுதியில் சமூகத்தில் பல சீர்கேடுகள் நிலவின. ஒரு புறம் இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே பகைமை நிலவ, மறுபுறம் இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே பிணக்குகள் ஏற்படலாயின. குறிப்பாக, "முஸ்லிம்களைக் கொண்டே முஸ்லிம்களை நசுக்க ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி செய்தனர்."[1] இது பற்றி இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் என்ற நூல் விரிவாகக் கூறுகிறது.

இந்து - முஸ்லிம் மக்களுக்கிடையிலான மதமாற்றத்தை நோக்கின், இந்துக்கள் தங்களிடையே நிலவிய சாதி ஏற்றத்தாழ்வுகள், அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டனர். ஆனால், மேல்தரத்து மக்கள் எனும் பகுப்பினர் மேலான நிலையிலே காணப்பட்டனர். அதே வேளை, இக்காலப் பகுதியில் இஸ்லாமியர்கள் பலர் இந்து மதத்திற்கு மாற விரும்பியதாகவும் இவ்வாறான மதமாற்றத்தினை பொதுவாக இந்துக்கள் அனுமதித்த போதும் ஆசாரமான இந்துக்கள் எனும் பகுப்பினர் அனுமதிக்கவில்லை என ஜவஹர்லால்நேருவின் 'கண்டுணர்ந்த இந்தியா' என்ற நூல் கூறுகிறது. இக்கருத்தினை, "ஆசாரமான இந்துக்கள் (Orthodox Hindus) பிறமதத்திலிருந்து இந்துமதத்திற்கு மாற்றம் செய்வதை ஆதரிப்பதில்லை."[2] எனக்கூறுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம். இவ்வாறு இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் நிலவின. பாபர், அக்பர் போன்ற மன்னர்கள் தங்களுடைய ஆட்சிக்காலத்தில் சமூகத்தில் காணப்பட்ட பூசல்களைக் களைந்து சமூகப் பொறையினை ஏற்படுத்த முனைந்தனர். ஆனால் , அவுரங்கசீப் போன்ற மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் சமூக ஒற்றுமை மிகவும் கீழ் நிலையில் காணப்பட்டது. அதாவது, இந்து - முஸ்லிம் இனப்பாகுபாடு உச்ச நிலையில் காணப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே சமரசப் போக்கினை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. இப்பின்னணியில், இடைக்கால இந்திய வரலாற்றில் இந்து - முஸ்லிம் மக்களிடையே சமரசப் போக்கினை ஏற்படுத்துவதற்கு மொகலாய மன்னர்கள் ஆற்றிய பங்களிப்பினை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**இந்து - முஸ்லிம் மதங்களுக்கிடையிலான சமரசப் போக்கு:**

மனிதத் தன்மை மிகுந்த குணத்திலும், சமூக நன்மைகள் செய்யும் ஈடுபாட்டிலும், கற்றோரை ஆதரிப்பதிலும் , கல்வியைச் சிறப்புறச் செய்வதிலும் அவரைப் போன்றோர் யாருமேயில்லை அவருக்கு மேலாக உயர்வாக எந்த ஆசிய மன்னனையும் எண்ணிப்பார்க்க இயலாது" எனக் கூறுமளவிற்கு பாபர் மன்னரது பணிகள் காணப்பட்டன. உமாயூன் மன்னன் தன் ஆட்சிக் காலப் பகுதியில் சமூகத்தில் வாழ்ந்த அனைவரையும் இன, மத வேறுபாடின்றி சமமாகவே கருதி வந்தான். அதாவது, வகுப்பு வாதத்தினை எதிர்த்து சமூகத்தில் அமைதியைக் காணவிளைந்தான். மேற்குறித்த இருவரும் மிகக் குறுகிய காலமே இந்தியாவை ஆட்சி செய்தாலும் சமயப் பூசல்களற்ற சமூகத்தை உருவாக்குவதற்குப் பாடுபட்டவர்களுள் தலை சிறந்தவர்களாவார்கள்.

அக்பர் மன்னருடைய ஆட்சிக் காலப்பகுதியில் இப்பேரரசு வலிமைமிக்கதாய்க் காணப்பட்டது. அக்பர் மன்னரைப் பொறுத்தவரையில், 'எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்ற அடிப்படையில் எல்லோரும் வாழ வேண்டும். எந்தவித மத வேற்றுமையையும் எவரும் வெளிப்படுத்தக் கூடாது."[3] என்ற வகையில் மக்கள் அனைவரையும் ஒரு சேர நோக்கி சமூக ஒற்றுமையினை ஏற்படுத்தினான். மேலும், இந்துக்கள் தங்களது மத ஆசாரப்படி வாழ்வதற்கு அனுமதியளித்தான். இதனால் மொகலாய மன்னர்களிடம் இந்தியக் கலாசாரத்தின் பாதிப்பும், இராஜபுத்திரர்களிடம் பாரசீகக் கலாசாரமும் அதன் தாக்கமும் உருவாகின. அதனால் இவ்விரு கலாசாரங்களும் இணைந்து கலாசார சங்கமம் ஏற்படலாயிற்று. துருக்கி - பாரசீக கருத்துக்களை இந்து - இந்தியக் கருத்துக்களுடன் ஒன்று சேர்க்கும் முயற்சி காணப்பட்டது. இந்து - முஸ்லிம் பாணியில் அமைந்த கட்டடக்கலை உருப்பெற்றது. ரான மீர்ஸா இனியத்துல்லா வடிவமைத்த ஹுமாயூனின் சமாதி, ஃபதேபூசிக்ரியில் உள்ள ஜமாமஸ்ஜித்தின் பொது வடிவமைப்பு என்பன இதற்குச் சிறந்த உதாரணம். ஓவியக் கலையினைப் பொறுத்தவரையில் துருக்கிய, இரானிய மற்றும் இந்தியப் பாணிகள் ஒன்று சேர்ந்தன. "இராமாயண, மகாபாரத கதைகள், ஸ்ரீ கிருஷ்ணர் சம்பந்தப்பட்ட வரலாறுகள், இசைக் குறிப்புகளின் உருவங்கள்"[4] போன்றன

ஓவியர்களின் கருப்பொருளாக அமைந்தன. இசைக் கலையினைப் பொறுத்தவரையில், தேசிய இசைக் கலை நிலவியது. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே 'நேரிய இசைக்கலப்பும் உணர்வுக் கலப்பும்'[5] ஏற்படலாயிற்று. ஜவுன்பூரின் சுல்தானாகிய ஹீசேஸன் ஸொர்க்கி 'காயல்' எனும் புதியதொரு இசையினைத் தோற்றுவித்தான். இது இந்து - முஸ்லிம்களிடையே பிரபல்யமானது. அத்துடன், 'திரௌபத்' எனும் பழைய இந்துப்பாணி இசையினை முஸ்லிம்கள் வெகுவாக விரும்பினர்.'' இந்து - முஸ்லிம் ஐக்கியத்தின் இதயத் துடிப்பாக இசை விளங்கியது.'' இது அவர்களுக்கிடையிலான பரஸ்பர ஒற்றுமையினை எடுத்துக் காட்டுகிறது. மேலும், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் என அனைத்து அம்சங்களிலும் ஒத்தத் தன்மைகள் காணப்பட்டன. அக்பர் மன்னன் இஸ்லாமியர்களுக்கு எதிராக, 1. மாட்டிறைச்சி விலக்கப்படவேண்டும். 2. காட்டு மிருகங்களை புசிக்கலாம். 3. ரம்சான் நோன்பு அனுஷ்டிக்கலாகாது 4. அறபு மொழி , குர் ஆன் கற்றலாகாது போன்ற ஆணைகளைப் பிறப்பித்தான். மேற்குறித்தவற்றுள் பல அம்சங்கள் இஸ்லாமியர்களுக்கு முரணானதாகக் காணப்பட்டாலும் அவனுடைய நோக்கு எந்த மதத்தினையும் குறை கூறுவதல்ல. பொதுச் சமயம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் சமூகத்தில் அமைதியை நிலைநிறுத்துவதாகும். இவரது இச்செயற்பாட்டின் காரணமாக இஸ்லாம் சமயத்தின் பகைவர் என இகழப்பட்டான். ஆனால், இவனுடைய நோக்கு இன, மத வேறுபாடின்றி குடிமக்களுக்கு முதன்மை அளிப்பதாகும். '' பல நிலைகளிலும் பல இனங்களாகவும் வாழ்ந்த குடிமக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றியும் அய்னி படம் பிடித்துக் காட்டுகிறது.''[6] என Mr. Blochmann அவர்கள் கூறும் கூற்று குறிப்பிடற்பாலது. ''துணிவு, சாகசஉணர்வு, நிர்வாகத்திறமை, தலைமை ஏற்கும் குணம், இலட்சிய வேட்கை, செயல்திறம் மிக்க கம்பீரம் ஆகியவை நிறையப் பெற்றிருந்த அக்பர், கனிவும் மனிதாபிமானமும் உடையவராக இருந்தார். அதனால் அவர் தலைமையைப் பலரும் விரும்பி ஏற்றனர்…'' ''மக்கள் இதயங்களை அடைய விரும்பிச் செயலாற்றினார். அவர் தலைமையில் இந்தியா பழையபடி ஒருங்கிணையும் வாய்ப்பு - பூகோள அளவில் மட்டுமல்ல, உணர்வு மட்டத்திலும் - ஏற்பட்டது. ஐம்பதாண்டுகால ஆட்சி முழுவதும் அவர் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் இயங்க வேண்டுமென்றே திட்டமிட்டுச் செயல்பட்டார்.''[7] தான் இந்துப் பெண்களை மணந்ததுடன், தன்னுடைய புத்திரர்களையும் இந்துக்களுடன் பழகுவதற்கு அனுமதியளித்தான். ''மதமார்ச்சரியத்தை அழிப்பதாகக் கூறி, 'தீனே இலாஹி'[8] என்ற புதிய மார்க்கத்தை ஏற்படுத்தினான். இவன் உருவாக்கிய இந்திய தேசம் ''சமய அடிப்படையில் அல்லாது, ஒரே ராஜ்யத்தின் குடிமக்கள் என்ற அடிப்படையில் அமைந்ததாகும்.''[9] சமயச் சார்பற்ற இனவழிசாராத ஓர் அரசை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் அக்பரது மனதில் காணப்பட்டது என்பதை பாரசீகத்தின் ஷா அபாஸ் ஸ.ஃ.பாவிற்கு அவர் எழுதிய கடிதத்தின் மூலமும் அறியமுடிகிறது. அக்கடிதம் வருமாறு,

''பல்வேறு சமயப் பிரிவுகளும் கடவுள் நமக்களித்த தேவ பொக்கிஷங்கள். அவற்றை அவை உள்ளவாறே நாம் நேசிக்க வேண்டும். ஒவ்வொரு சமயமும் ஆண்டவனால் ஆசிர்வதிக்கப்பட்டது என்பதை நாம் திடமாக நம்ப வேண்டும். சர்வ சமய சகிப்புத் தன்மை என்ற பசுமை மாறாத பூந்தோட்டத்தின் பயனை அனுபவிப்பதே நமது உளமார்ந்த விருப்பம். தேவலோக அரசனான கடவுள் தனது அருளை எல்லா மனிதர்களிடத்தும் எவ்வித பாரபட்சமுமின்றி சொரிந்திருக்கிறான். கடவுளின் நிழலாக இங்கே ஆளுகின்ற அரசர்களும் இந்தக் கொள்கையை ஒரு போதும் கைவிடலாகாது.''[10]

அரசனானவன் '' எல்லா சமய வேற்றுமைகளுக்கும் அப்பாற்பட்டவனாகவும், ஒவ்வொரு இனத்துக்கும், பிரிவுக்கும் அவன் ஆற்ற வேண்டியுள்ள கடமைகளுக்குக் குறுக்கே சமயச் சார்பான போக்குகள் வராமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். எல்லாச் சமயத்தையும் ஏற்றுக் கொண்டது போன்ற

அரசனின் அரவணைப்பில் எல்லாரும் மகிழ்ச்சியையும் மன அமைதியையும் பெற வேண்டும். அப்போது தான், கடவுளின் நிழலான அரசன் அளிக்கும் பயன்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியாகக் கிடைக்கும்.''[11] மேற்குறிப்பிட்ட அம்சங்களுக்கேற்பவே அக்பர் மன்னன் ஆட்சி புரிந்தான். 1563ஆம் ஆண்டு புனிதப்பயண வரியையும், ஜிஸியா வரியையும் ஒழித்து முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே நிலவிய வேறுபாட்டிற்கு முடிவு கட்டினான். 1564இல் வெளியிட்ட அரசாணையில், ''எந்த ஒரு சாதி, இனத்தவராயினும் இந்தியாவில் வசிக்கும் எவரும் அடிமையாக்கப்படக் கூடாது''[12] எனக் கூறினான். நிர்வாகப் பணி, இராணுவப் பணி உள்ளிட்ட அனைத்து அரச பணிகளிலும் இந்துக்களுக்கும் வாய்ப்பளித்ததுடன், தனது அலுவலகத்தில் இராஜாபீர்பால், இராஜா தோடர்மால், இராஜா பகவன் தாஸ், இராஜா மான் சிங் முதலிய இந்து அலுவலர்களை நியமித்து இன, மத வேறுபாடின்றி சமூகத்தை வழி நடத்தினான். சுருங்கக் கூறின்,

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்''[13] எனும் குறளுடன் ஒப்பு நோக்கத்தக்க வகையில் இவனுடைய ஆட்சி திகழ்ந்தது எனலாம்.

ஜகாங்கீர் மன்னர், இஸ்லாமிய ஆசாரத்துடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டதுடன், இந்துக்களது சமய ஆசாரங்களைக் கடைப்பிடிக்க முன்வரவில்லை என்றாலும் இந்துக்கள் தங்களது வழிபாட்டினை மேற்கொள்வதில் எவ்வித தடையினையும் விதிக்க வில்லை. அறிவுக்கூர்மைமிக்க மன்னனாகத் திகழ்ந்த ஷாஜகான் இந்துக்களை உயர் பதவியில் அமர்த்தினான். தன் மகனான தாராவை இந்துக்களுடன் பழகுவதற்கு அனுமதியளித்தான். இராஜபுத்திர இந்துப் பெண்ணுக்குப் பிறந்த இவன் இந்துக்களால் 'இந்துக்களின் வாரிசு' என அழைக்கப்பட்டான். '' எனது தந்தை பாட்டனாரைப் பின்பற்றி நான், உங்களது விழாக்களை அரண்மனைக்குள் நடத்தவோ, நான் அதில் கலந்து கொள்ளவோ முடியாது. நீங்கள் உங்கள் மத ஆசாரங்களை உங்களது இடங்களிலே நடத்திக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் முஸ்லிமாயிருப்பதால், இஸ்லாமிய ஆசாரங்கள் படியே நடந்து கொள்வேன்.''[14] எனக் கூறுவதிலிருந்து தனது மதத்தில் அவன் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் பிற மதத்தினரது கொள்கைக்கு மதிப்பளித்தமையும் புலனாகிறது. ஆனால், இந்துக்கள் புதிய ஆலயங்களை நிர்மாணிப்பதில் கட்டுப்பாடுடையவனாகக் காணப்பட்டான். இதனை, பனாரஸில்' புதிய கோயில்களை நிர்மாணிப்பதற்கு இந்துக்கள் அனுமதி கேட்ட போது அதற்கு, '' இருக்கும் கோவில்களே போதிய பூஜை புனஸ்காரங்கள் நடத்தாது அலங்கோலமாகக் கிடக்கின்றன. எனவே, அவற்றை ஒழுங்குபடுத்த முயற்சியுங்கள், புதிதாகக் கட்டிக் கோவில்களின் அந்தஸ்தைக் களங்கப்படுத்தாதீர்கள்.''[15] எனக்கூறினான். இக்காலத்தில் இந்துப் பெண்களை முஸ்லிம்கள் மணப்பதும், முஸ்லிம் பெண்களை இந்துக்கள் மணப்பதும் பொது வழக்காகக் காணப்பட்டது. ஆனால், ஷாஜகானைப் பொறுத்தவரையில் இம்முறையினை ஏற்றுக் கொண்டவனாகத் தெரியவில்லை. '' ஹிந்துப் பெண்களை முஸ்லிம்களாக்கித்தான் முஸ்லிம்கள் மணக்கவேண்டுமென்று நிபந்தனை விதித்தார்.''[16] இதில் பாரபட்சமிக்க மன்னனாகவே இவன் காணப்பட்டான். மேற்குறித்த யாவருள்ளும் வேறுபட்ட மனநிலை கொண்ட கொடூரமிக்க மன்னனாக அவுரங்கசீப் காணப்பட்டான். இவனுடைய ஆட்சிக்காலப் பகுதியில் இந்துக்கள் பல சவால்களை எதிர்கொண்டனர். இந்துக்கள் மீது ஜெஸியா வரியினை வசூலித்ததுடன் இராஜபுத்திர மன்னர்களுடன் எப்பொழுதும் பகைமையே பாராட்டினான். கோயில்களை நிர்மாணித்தல், இசை வளர்ச்சி, பண்டிகைகளை கொண்டாடுதல், சோதிடம், நாட்குறிப்பு தயாரித்தல் ஆகியவற்றுக்குத் தடை விதித்து இந்து - முஸ்லிம் மக்களிடையே பேதம் கற்பித்த மன்னனாகக் காணப்பட்டான். '' சமயச் சார்பற்ற இந்த முகலாயப் பேரரசை , முஸ்லீம்

அரசாக மாற்ற வேண்டும் என்று அக்பருடைய பேரனின் மகனான ஔரங்கசீப் முயன்று தோற்றான். அதன் விளைவாக, நூறாண்டு காலத்திற்குப் பெரும் பேரரசாக விளங்கிய முகலாயப் பேரரசு, ஔரங்கசீபின் மறைவுக்குப் பின்னர் அதன் நிழல்போல மிகச் சிறிய அரசாகச் சுருங்கி விட்டது."[17]

இவ்வாறு மொகலாயர்களது ஆட்சிக் காலப்பகுதியில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே பல விதமான கருத்து வேறுபாடுகள் நிலவிய போதும் அவர்களுக்கிடையே ஒரு வித சமரசப் போக்கினையும் காணமுடிகிறது. குறிப்பாக, பாபர், உமாயூன், அக்பர் ஆகியோரது ஆட்சிக்காலப் பகுதியில் இந்து - முஸ்லிம் மதங்களுக்கிடையே சமரசம் பேணப்பட்ட போதும் அவுரங்கசீப் போன்ற மன்னர்களது ஆட்சிக் காலப்பகுதியில் சமயப் பூசல்களையே அதிகமாகக் காணமுடிகிறது.

**ஆய்வின் நோக்கம்:**

மொகலாயர் ஆட்சிக்காலப் பகுதியில் இந்து - இஸ்லாம் மதங்களுக்கிடையே சமரசப் போக்கினை ஏற்படுத்துவதில் மொகலாய மன்னர்களது பங்களிப்பினை இனங்காணல்.

**ஆய்வுப் பிரச்சினை:**

மொகலாய மன்னர்களது வரிசையில் அக்பர் போன்ற மன்னர்கள் சமரசப் போக்குடையவர்களாகக் காணப்பட்டாலும் அவுரங்கசீப் போன்றோர் காழ்ப்புணர்ச்சி மிக்கவர்களாகவே காணப்பட்டனர். இப்பின்னணியில், இக்காலப் பகுதியில் சமூகத்தில் நிலவிய சமயப் பூசல்களைக் களைந்து சமரசத்தினை வலியுறுத்துவதில் மொகலாய மன்னர்களது பங்களிப்பு எவ்வாறு அமைந்தது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் கருதுகோள்:**

இந்து - முஸ்லிம் மக்களிடையே நிலவிய சமயப் பூசல்களைக் களைந்து சமரசத்தினை ஏற்படுத்துவதில் அக்பர் போன்ற மன்னர்களது பங்களிப்புகள் காத்திரமானவையாகும்.

**ஆய்வின் எல்லை:**

இடைக்கால இந்திய வரலாற்றில் மொகலாயர் ஆட்சிக் காலம். (Medieval period)

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வு, சமூகவியல், ஒப்பிட்டு, விவரண ஆய்வு முறைமைகளைப் பின்பற்றுகின்றது.

**தகவல் சேகரிப்பு முறை:**

முதலாம் நிலைத் தரவுகளாக அய்னி அக்பரி, அக்பர் நாமா, தப்ஹாதி அக்பரி, உமாயூன் நாமா போன்றனவும், இரண்டாம் நிலைத் தரவுகளாக இந்தியாவில் மொகலாய மன்னர்களது ஆட்சி தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவு:**

இந்து - முஸ்லிம் மக்களிடையே நிலவிய சமயப் பூசல்களைக் களைந்து சமூகத்தில் அமைதியை ஏற்படுத்த முனைந்த மொகலாய மன்னர்களது வரிசையில் பாபர், உமாயூன், அக்பர் போன்ற மன்னர்களது பணிகள் மகத்தானவையாகும்.

**பரிந்துரைகள்:**

பன்முகக் கலாசார சூழலில் வாழும் ஒவ்வொருவரும் சமூகத்தில் காழ்ப்புணர்ச்சிகளை ஏற்படுத்தாது, சமூகப் பொறையுடன் வாழ்வதற்கு முனைய வேண்டும்.

**அடிக்குறிப்புகள்:**

1. அல்ஹாஜ் குலாம் ரசூல், 1998, **இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்,** பொருளடக்கம்.
2. ஜவஹர்லால்நேரு, ஜெயரதன், (த.ஆ), 2004, **கண்டுணர்ந்த இந்தியா,** ப. 224.
3. அல்ஹாஜ் குலாம் ரசூல், 1998, **இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்,** பக். 438 - 439.
4. அபிட் ஹுசைன், 1978, **இந்தியாவின் தேசியப் பண்பாடு,** ப. 142.
5. மேலது, ப. 145.
6. இபின் ஹஸன், மாணிக்கவேலு, பா., 1991, **முகலாயப் பேரரசின் மைய அமைப்பு,** ப.10.
7. ஜவஹர்லால்நேரு, ஜெயரதன், 2004, **கண்டுணர்ந்த இந்தியா,** ப. 216.
8. அல்ஹாஜ் குலாம் ரசூல், 1998, **இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்,** ப. 439.
9. அபிட் ஹுசைன், 1978, **இந்தியாவின் தேசியப் பண்பாடு,** ப. 130.
10. மேலது, பக். 131 - 132.
11. மேலது, ப.132.
12. மேலது, ப. 132.
13. ந.சி.க., 2003, **திருவள்ளுவர்**, ப.134.
14. அல்ஹாஜ் குலாம் ரசூல், 1998, **இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்,** ப.465.
15. மேலது, ப.466.
16. மேலது, ப. 467.
17. அபிட் ஹுசைன், 1978, **இந்தியாவின் தேசியப் பண்பாடு,** ப. 134.

**உசாத்துணைநூல்கள்:**


1. அத்தர் அலி,எம்., 1989, **அவுரங்கசீபின் ஆட்சியில் முகலாய பிரபு குலம்**, சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
2. அபிட் ஹுசைன், எஸ்., தட்சிணாமூர்த்தி, க., ( ஆங்கிலத்திலிருந்து தமிழில்), 1978, **இந்தியாவின் தேசியப் பண்பாடு,** இந்தியா: நேஷனல் புக் டிரஸ்ட்.
3. அல்ஹாஜ் குலாம் ரசூல், 1998, **இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்**, தஞ்சாவூர்.
4. இபின்ஹஸன், மாணிக்கவேலு. பா., (தமிழாக்கம்), **முகலாயப் பேரரசின் மைய அமைப்பு,** சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
5. இர்பான் அபீப், சிசுபாலன், இரா., (தமிழாக்கம்), 2010, **இந்திய வரலாறு குறித்த ஆய்வுரைகள்**, சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
6. ந.சி.க., 2003, **திருவள்ளுவர்,** சென்னை: அமிழ்தம் பதிப்பகம்.
7. வின்சென்ட் ஸ்மித் A., முருகேசன், சிவ., (தமிழில்), 2011, **மொகலாயப் பேரரசில் பெர்னியரின் பயணங்கள், (**1656 - 1668) சென்னை: சந்தியா பதிப்பகம்.

8. ஜவஹர்லால்நேரு, ஜெயரதன், (தமிழாக்கம்), 2004, **கண்டுணர்ந்த இந்தியா** ( The Discovery of India), சென்னை: பூரம் பதிப்பகம்.

9. Richard M. Eaton, **Temple desecration and Muslim states in Medieval India**, Delhi: Hope India.